ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2367/23 - 2024 ජනවාරි මස 19 වැනි සිකුරාදා - 2024.01.19

2367/23 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MUL/LND/02/ACQ/40.

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/2/2011/FR/76.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன பிரதேச செயலகப் பிரிவின் இல. 271/B, குடாபான கிராம அலுவலர் பிரிவிற்குரிய குடாபான கிராமத்தில் அமைந்துள்ளதும் 2023.12.07 ஆந் திகதிய மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப் பட்ட இறுதிக் கிராமப் படத்தின் கடஸ்டர் வரைபட இல. 820412 இல் வலய இல. 03, தாள் இல. 01 இல் காணித் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பின் சுமார் 0.0495 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டின் விபரங்கள் :

01. துண்டு இல. 1

காணியின் பெயர் : படேஹேன; விபரம் : அடர்ந்த காடு; விஸ்தீரணம் : 0.0495 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு முலட்டியன பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விந்தியா டி சமரக்கொடி,
பிரதேச செயலாளர்,
முலட்டியன.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
முலட்டியன,
2024, சனவரி 16.

EOG 01 - 0181

1A - G 41286 — 14 (2024/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*